முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved

பரீட்சைத் திணைக்களம்- A PLUS CAMPUS
Exam Department - A PLUS CAMPUS
විභාග දෙපාර්තමේන්තුව - A PLUS CAMPUS

**தரம்–08 முதலாம் தவணைப் பரீட்சை , 2026**
**ශ්‍රේණිය-08 පළමු වාරය විභාගය, 2026**
**Grade-08 First Term Examination, 2026**

| | | |
|---|---|---|
| தமிழ்<br>Tamil | சுட்டெண்/Index No:………………… | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

பகுதி-**I**

மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) நானும் தம்பியும் கன்னல் சாப்பிட்டு மகிழ்ந்தோம் - கன்னல் என்பது

1. பயறு 2. கரும்பு 3. கற்கண்டு 4. சோளம்

2) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்- இங்கு அகம் என்பதன் ஒத்த சொல்

1. பாடசாலை 2. முகம் 3. வீடு 4. உள்ளம்

3) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் காணப்படுகின்றது. இயற்கை என்பதன் எதிர்க்கருத்துச்சொல்

1. செயற்கை 2. செயற்பாடு 3. இயல்பு 4. இயற்றுதல்

4) பிரகாசம், சுடர், சோதி, கதிர் என்பன குறிக்கும் ஒரு பொருள்

1. வெளிச்சம் 2. ஒலி 3. ஒளி 4. விளக்கு

5) சலீம் மாமா தனது பெரிய தோட்டத்தைப் பண்படுத்தினார் - இங்கு செயப்படுபொருள் அடைமொழி

1. மாமா 2. பண்படுத்தினார் 3. தோட்டம் 4. பெரிய

6) நிகழ்கால இடைநிலைகளாக அமைவன

1. த், ட், ற் 2. ப், வ் 3. கின்று, கிறு 4. இன், இ

7) தீபா எழுதிய கவிதையை வாசித்ததும் அனைவரும் பாராட்டினர் - இங்கு வந்த பெயரெச்சம்

1. அனைவரும் 2. எழுதிய 3. கவிதையை 4. பாராட்டினர்

8) மாணவர் ஆசிரியரோடு சுற்றுலா சென்றனர் - இவ்வாக்கியத்திலுள்ள வேற்றுமை உருபின் பொருள்

1. கருவிப்பொருள் 2. கருத்தாப்பொருள்
3. உடனிகழ்ச்சிப்பொருள் 4. செயப்படுபொருள்

9) நான் உண்டேன் என்பது

1. தன்மை வினைமுற்று 2. படர்க்கை வினைமுற்று
3. முன்னிலை வினைமுற்று 4. குறிப்பு வினைமுற்று

10) ஒரு வினைமுற்று வேற்றுமை உருபை ஏற்று பெயர்த்தன்மை பெற்று வருவது

1. தெரிநிலைவினை 2. குறிப்பு வினை
3. வினையாலணையும் பெயர் 4. ஏவல் வினை

11) உயிர் மெய் குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை

1. 90 2. 95 3. 126 4. 216

12) வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்து நெடுங்காலமாக வழங்கி வரும் எழுத்துக்கள்

1. ஆய்த எழுத்து 2. கிரந்த எழுத்து
3. உயிர்மெய் எழுத்து 4. கூட்டுயிர் எழுத்து

13) ரெலஸ்கோப் (Telescope) என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்

1. தானியங்கி 2. தொலைநோக்கி 3. தொலைபேசி 4. தொலைப்பன்னி

14) சினைப்பெயருள் அடங்கும் சொற்கூட்டம்

1. நாள், வாரம், மணி 2. செம்மை, இனிமை, கருமை
3. மரம், மனிதன், புத்தகம் 4. பூ, இலை, தலை

15) காரண இடுகுறிப் பெயருள் அடங்கும் சொல்

1. முள்ளி 2. பறவை 3. நிலம் 4. மாணவன்

16) ஒரு பொருள் தொடர்பான விடயங்களை காரண காரிய தொடர்புகள் காட்டி எழுதும் கட்டுரை

1. வர்ணனைக் கட்டுரை 2. விளக்கக் கட்டுரை
3. கற்பனைக் கட்டுரை 4. சுயசரிதைக் கட்டுரை

17) வாழையின் இளமைப் பெயர் கன்று போல பனையின் இளமைப் பெயர்

1. குட்டி 2. வடலி 3. நாற்று 4. கன்று

18) வீணான வேடிக்கை விளையாட்டுகளில் பணத்தை அளவுக்கதிகமாகச் செலவு செய்த குமரன் தற்பொழுது வறுமையில் வாடுகிறான் - இங்கு அளவுக்கதிகமாக செலவு செய்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்

1. அள்ளி இறைத்தல் 2. ஆழம் பார்த்தல்
3. கைதூக்கி விடல் 4. கரையேறுதல்

19) எமது நாட்டில் இடைக்கிடை மழை பெய்தது. இடைக்கிடை என்பது

1. அடுக்குத்தொடர் 2. இரட்டைக்கிளவி
3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத்தொடர்

20) நேற்று மழைபெய்யுமென எல்லோரும்

1. எதிர்பார்த்தார்கள் 2. எதிர்பார்ப்பார்கள் 3. எதிர்பார்க்கிறார்கள் 4. எதிர்பார்க்கின்றார்கள்

(30 புள்ளிகள்)

APLUS CAMPUS

## பகுதி -II

எல்லா வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) நீங்கள் இரண்டாம் தவணைக்காக வகுப்பறையில் செய்த கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1) நீங்கள் செய்த கணிப்பீட்டின் தலைப்பு யாது?

2) கணிப்பீட்டை செய்யுமுன் ஆசிரியர் கூறிய விடயங்கள் 2 தருக?

3) இச்செயற்பாட்டிற்காக நீங்கள் தகவல் பெற்ற வழிகள் 2 தருக?

4) அச்செயற்பாட்டை செய்யும் போது நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் இரண்டு தருக?

5) இப்பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக்கொண்டீர்கள்?

6) கணிப்பீட்டினால் பெற்றுக்கொண்ட பயன்கள் மூன்று தருக?

(16 புள்ளிகள்)

2) பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களில் கட்டுரை எழுதுக.

1. வாசிப்பின் முக்கியத்துவம்

2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதை விளக்கும் சிறுகதை

3. நான் சென்ற கல்விச் சுற்றுலா

4. உடைந்த கணனி ஒன்று தன் கதை கூறல்

(14 புள்ளிகள்)

3) விபத்தொன்றில் சிக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பிய நண்பன் அல்லது நண்பிக்கு ஓர் ஆறுதல் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. வியாபாரியின் கோபம் என்ற கதையை எழுதியவர் யார்?

2. “கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனவன்” யார்?

3. கம்பர் காப்பியத்தில் அதிக பாடல்களில் பாடப்பட்டவர் யார்? ஒரு பாடலில் பாடப்பட்டவர் யார்?

4. கட்டுரையின் வகைகள் 2 தருக?

5. அராபர்ட் புரூஸிற்கு ஏற்பட்ட ஐயப்பாடு யாது?

(5x2=10 புள்ளிகள்)

5) பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் எழுதுக.

| | |
|---|---|
| 1. கனி | 2. கணி |
| 3. தினை | 4. திணை |
| 5. அலை | 6. அழை |
| 7. ஆனை | 8. ஆணை |
| 9. கலகம் | 10. கழகம் |

(10 புள்ளிகள்)

APLUS CAMPUS

6) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

**சென்றதினி மீளாது, மூட ரேநீர்**

**எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து**

**கொன்றழிக்குங் கவலையெனும் குழியில் வீழ்ந்து**

**குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டா**

**இன்றுபுதி தாய்ப்பிறந்தோ மென்று நீவிர்**

**எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**

**நின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்**

**தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா.**

(1) மூடரின் செயல் எதுவெனக் கூறப்பட்டுள்ளது?

(2) வாழ்க்கையை இன்பமாகக் கழிப்பதற்கு யாது செய்ய வேண்டும்?

(3) இப்பாடலில் கூறப்பட்ட விழுமியக் கருத்துக்கள் இரண்டு தருக?

(4) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. சென்றதினி

2. கொன்றழிக்கும்

(5) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒரே கருத்துள்ள சொல்லைப் பாட்டில் தெரிவு செய்து எழுதுக.

1. மகிழ்ந்து　　　　2. திரும்பிவராது

(10 புள்ளிகள்)

A PLUS CAMPUS



# A PLUS CAMPUS

## அனைத்தும் ஒரே இடத்தில்

## Grade:01-13

**தரம் 01 தொடக்கம் 13 வரையான அனைத்து பாடங்களும் மிக நுணுக்கமான முறையில் சிறப்பான ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.**

## A/L
## Commerce , Arts

### கற்கை நெறிகள்

- Diploma In Information Technology
- Diploma In Spoken English
- Diploma In English
- Youngers Learn English (Cambridge )
- IELTS Preparation Class
- Certificate in Makeup Artists

### Our Facilities

- Learning management System (LMS)
- Modern Class Rooms
- Computer Labs
- Qualified Lecture Panel
- E-Library

மேலதிக தகவல்களுக்கு எமது இணையத்தளத்தை பார்வையிடவும்

Mallavi,Mullaitivu District, Northern Province , Sri Lanka
www.apluscampus.lk
+94 76 626 1801